பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 29 | வியாழக்கிழமை | 14.11.2024 | அதிர்வு 104

## கல்கிஸையில் நேற்றிரவு இளைஞர் சுட்டுக்கொலை!



கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோ விட்ட பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு இடம் பெற்ற துப்பாக்கிச்சூட் டில் இளைஞர் 05



# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இன்று நாடாளுமன்றத் தேர்தல்!

### காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிக்க அனுமதி

இலங்கையில் பலத்த பாதுகாப் புக்கு மத்தியில் நாடாளுமன்றத் தேர்தல் இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது. மக்கள் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை தமது வாக்குகளைச் செலுத்த முடி யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் வாக்களிப்ப தற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற் றுள்ளனர். இவர்கள் வாக்களிக்க வசதியாக நாடு முழுவதும் 13 ஆயி ரத்து 421 வாக்களிப்பு நிலையங் கள் அமைக்கப்பட்டுள்ளன. 05

## இடது கை ஆட்காட்டி விரல் மீது இன்று அடையாளம் இடப்படும்!

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு



“இன்று நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடை யாளம் இடப்படும். வாக்காளருக்கு 05




இலங்கையில் சிகரெட் விற்பனை வீழ்ச்சி அடைந்திருப்பதாக புள்ளி விவ ரங்கள் கூறுகின்றன. ஆனால் இது மகிழ்ச்சி தரக்கூடிய விடயம் அல்ல. இந்த விற்பனை வீழ்ச்சிக்கு பின் னால் பாதகமான சில காரணங்கள் இருப்பது சிந்தனைக்குரியதாக உள்ளது.

சிலோன் டுபாக்கோ கம்பெனி இலங்கையில் சிகரெட் உற்பத்தி மற்றும் விற்பனையின் ஏகபோக உரி மையைக் கொண்ட நிறுவனம். அதன் பெரும்பாலான பங்குகளை பிரிட்டிஷ் அமெரிக்க டுபாக்கோ கம்பெனி வைத்திருக்கின்றது.

சிகரெட்டுக்கு அரசாங்கம் விதித்திருக்கும் அதீத வரி காரணமாக விற்பனை வீழ்ச்சி அடைந்திருப்பதாகக் கருதப் பட்டாலும் உண்மையில் அது மட்டும் காரணம் அல்ல என்று கூறப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில. 1.74 பில்லியன் சிகரெட்டுகளாக இருந்த விற்பனை இந்த ஆண்டில் அதே காலப்பகுதியில் 1.39 பில்லியன் சிகரெட்டுகளாகக் குறைந்துவிட்டது.

அரசாங்கத்தின் கூடிய கலால் வரி விதிப்புக் 05

# கொரிய தொழில் முயற்சியாளர் சங்கம் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது



விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்குக் கொரியாவின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் சங்கம் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரியாவின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கும் அந்த சங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

கொரியாவில் மீன்பிடித் தொழிலுக்காக இலங்கைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.



# தேர்தல் காலத்தில் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பில் அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

தேர்தல் காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு 6 விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

070 211 71 17, 011 366 80 32, 011 366 80 87, 011 366 80 25, 011366 80 26 மற்றும் 011 366 80 19 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி வரை தொடரும் என இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.



# போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவராக மகேஸ்வரன் நியமனம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவராக மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு புதிய தலைவர் நேற்றைய தினம் வடக்கு ஆளுனரால் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் சமுர்த்திப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற மகேஸ்வரனே தற்போது வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அமைதியான தேர்தலை வேண்டி யாழில் சர்வமதப் பிரார்த்தனை!



இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் அமைதியாகவும் வன்முறைகள் அற்ற முறையில் நடைபெற வேண்டியும் மக்கள் அனைவரும் தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டியும் யாழ்ப்பாணத்தில் சர்வமதத் தலைவர்களால் நேற்று பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள் கலந்துகொண்டு சர்வமதப் பிரார்த்தனைகளை முன்னெடுத்தனர்.







# வடமராட்சி கிழக்கில் அகற்றப்பட்ட வீதித் தடைகள்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதங்கேணி, நாகர்கோவில், வலிக்கண்டி பகுதிகளில் போடப்பட்டிருந்த வீதித் தடைகள் அகற்றப்பட்டுள்ளன.

இராணுவம் மற்றும் பொலிஸ் இணைந்த குறித்த வீதித் தடைகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அகற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்ட செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த இந்த வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன. எனினும், இந்த வீதித்தடைகள் மக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். மாவட்டத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கல்

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், நாடாளுமன்றத் தேர்தல் சட்ட வரையறைகளுக்கமைய, தேர்தல் கடமைகளில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெற ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொண்டு, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களை வாழ்த்தி அவர்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைத்தார்.

இந்த நிகழ்வில் மேலதிக அறிவுறுத்தல்களை சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர்களுக்கு உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் வழங்கினார்.





# வாக்களிக்க விடுமுறை வழங்காதோருக்கு ஒரு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்படும்

## பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை

"இன்று நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் செல்ல விடுமுறை வழங்காத நிறுவனங்கள் தொடர்பாக எமக்கு முறைப்பாடு வந்திருக்கின்றது. அவ்வாறு விடுறை வழங்காவிட்டால் நிறுவனத்தின் பிரதானிக்கு ஒரு மாத காலம் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்."

– இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க விடுமுறை வழங்குவதில்லை என்ற முறைப்பாடு தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்குவதில்லை என்ற முறைப்பாடு எமக்குக் கிடைத்திருக்கின்றது. அவ்வாறு எந்த நிறுவனமாவது, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளதன் பிரகாரம், வாக்களிக்கச் செல்ல இருக்கும் தூரத்துக்கு அமைய வாக்களிக்கச் செல்ல விடுமுறை வழங்காவிட்டால், நிறுவனத்தின் பிரதானிக்கு ஒரு மாத காலம் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் அல்லது ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் இரண்டும் விதிக்கப்படலாம். அதனால் மக்களின் அடிப்படை உரிமையைப் பாதுகாக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் பல்வேறு வழிகளில் கட்டணம் செலுத்தப்பட்ட தேர்தல் விளம்பரங்கள் பிரசுமாகியுள்ளன. இது தொடர்பாக 580 விளம்பரங்கள் பிரசுமாகியுள்ளமை தொடர்பில் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நாங்கள் முறையிட்டுள்ளோம்.

இது தவிர தனிப்பட்ட முறையில் சமூகவலைத்தளங்களில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பாகவும் நாங்கள் அதானம் செலுத்தி வருகின்றோம்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் வன்முறைகள் நிறைந்த இந்த நாட்டின் தேர்தல் கலாசாரத்தில் தெளிவான தொரு மாற்றத்தை காணக்கூடியதாக இருந்தது. அது இந்த முறை நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தத் தேர்தல் நடவடிக்கைகளின்போதும் மோதல் சம்பவங்கள் மிகவும் குறைவாகவே பதிவாகியுள்ளன. வவுனியாவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் மற்றும் மொனராகலையில் வேட்பாளர் ஒருவர் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளமை போன்ற சம்பவங்களே இடம்பெற்றுள்ளன.

அதனால் தேர்தல் கலாசாரம் குறிப்பிடத்தக்களவில் நல்ல நிலைக்கு வந்துள்ளது. அதேபோன்று அரச அதிகாரத்தைப் பயன்படுத்தல் மற்றும் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற விடயங்களும் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பிடக்கூடிய அளவில் இடம்பெறவில்லை. அதனால் தேர்தல் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தைப் போன்று அரசியல் கலாசாரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான முதலாவது அடித்தளத்தை மக்கள் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் முன்னெடுக்க வேண்டும்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணமாக சிகரெட்டுகளின் விலை எக்கச்சக்கமாக உயர்ந்துள்ளது. இதைப் பயன்படுத்தி சந்தையில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட அல்லது கடத்தப்பட்ட சிகரெட்டுகள் பெருமளவில் ஆக்கிரமித்துள்ளன. அதனால்தான் சிலோன் டுபாக்கோ கம்பெனி விநியோகிக்கும் – அரசாங்கத்தின் சட்ட ரீதியான வரி விதிக்கப்பட்ட – சிகரெட்களின் விற்பனை குறைந்துள்ளது. களவாக – சட்டவிரோதமாக – நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் விற்பனை அந்த இடத்தைப் பிடித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

பணவீக்கத்தால் மூலப்பொருள்கள் செலவு உயர, டுபாக்கோ நிறுவனமும் உள்நாட்டில் சிகரெட்களின் விலையை உயர்த்தி உள்ளது .அத்தோடு வரிவிதிப்பும் சேர சாதாரண – சாமன்ய – மக்கள் விலை கொடுத்து வாங்க முடியாத ஆடம்பரப் பொருளாக சிகரெட் மாறி இருக்கின்றது. அதனால் பீடிக்குத் தங்களை மாற்றிக் கொண்ட பொதுமக்களின் எண்ணிக்கையும் சிகரெட் விற்பனையின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று டுபாக்கோ கம்பெனி கூறுகின்றது.

எது, எப்படி என்றாலும் சிகரெட் விற்பனை வீழ்ச்சி அடைந்திருக்கின்ற விவகாரத்தை வைத்து மக்கள் மகிழ முடியாத – பாதிப்பான – சூழ்நிலைதான் உள்ளது. அதுதான் உண்மை.

## கல்கிஸையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மேற்படி நபர் சிகிச்சைக்காகக் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

படோவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு ரி – 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் தொடர்பான எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இடது கை ஆட்காட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையில் உள்ள வேறு ஏதேனுமொரு விரலில் உரிய அடையாளம் இடப்படும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்காளரின் இடது கை சுண்டு விரலில் உரிய அடையாளம் இடப்பட்டது. அத்துடன் கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை பெருவிரலில் உரிய அடையாளம் இடப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 38(3) (ஆ) பிரிவின் பிரகாரம், வாக்களிப்பின்போது வாக்களிப்பதை அடையாளப்படும்போது எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளம் இடப்படும்.

வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையில் உள்ள வேறு ஏதேனுமொரு விரலில் உரிய அடையாளம் இடப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## பலத்த பாதுகாப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்றைய தினம் வாக்களிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்து விட்டன என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. வாக்களிக்கச் செல்லும் போது வாக்காளர் அட்டையைக் கொண்டு செல்ல வேண்டும். வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் இன்றைய தினமும் தமது உப தபால் நிலையத்தில் வாக்காளர் அட்டைகளைப் பெற முடியும். வாக்காளிப்பதற்கு வாக்காளர் அட்டை அவசியமில்லை. எனினும், வாக்காளர் அட்டையை கொண்டு செல்வது வாக்களிப்பதற்கு இலகுவாக அமையும்.

இதேநேரம் வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது ஆட்பதிவு திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகளை கொண்டு செல்லுதல் கட்டாயமானது.

தேர்தலுக்காகப் பொலிஸார், முப்படையினர், விசேட அதிரடிப் படையினர் என 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு 196 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர். இதற்காக இன்றைய தேர்தலில் அரசியல் கட்சிகளின் சார்பில் 5 ஆயிரத்து 464 வேட்பாளர்களும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 3 ஆயிரத்து 357 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

கம்பஹா மாவட்டத்திலிருந்து அதிகபட்சமாக 19 நாடாளுமன்ற உறுப்பினர்களும், குறைந்தபட்சமாக திருகோணமலை மாவட்டத்திலிருந்து 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# ஆட்பதிவு திணைக்களத்துக்கு இன்று செல்வதை தவிர்க்கவும்

தங்களால் முன்னெடுக்கப்படும் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் ஒருநாள் சேவை உட்பட பொதுமக்களுக்கான எவ்வித சேவைகளும் இன்று இடம்பெறமாட்டாது என ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆட்பதிவு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கான வாக்கெடுப்பு இன்று இடம்பெறும் நிலையில், ஆட்பதிவு திணைக்கள உத்தியோகத்தர்களும் தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக தேசிய அடையாள அட்டை உட்பட இதர சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று திணைக்களத்துக்கு வருகைதருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் ஆட்பதிவு திணைக்களம் பொதுமக்களைக் கோரியுள்ளது.




# தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளரை பதவி நீக்க சர்வதேச ஒலிம்பிக் குழு பரிந்துரை

இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளர் நாயகம் மெக்ஸ்வெல் டி சில்வாவை பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யுமாறு சர்வதேச ஒலிம்பிக் குழு கோரியுள்ளது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் ஒழுக்காறுக் குழுவினால் முன்வைக்கப்பட்ட முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேசிய ஒலிம்பிக் குழுவின் நிர்வாக குழுவை அவசரமாகக் கூட்டி, தாமதிக்காமல் உரிய நடவடிக்கையை எடுக்குமாறு இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியத்துக்கு, சர்வதேச ஒலிம்பிக் குழு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளது.



# 13 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெய்னை விழுங்கி வந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் கைது

13 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப்பிரிவினரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

Sierra Leone நாட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பயணியொருவர் மேற்படி கொக்கேய்ன் தொகையை விழுங்கிய நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

32 வயதான ஒருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு, அவர் விழுங்கியிருந்த கொக்கெய்ன் வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# கொழும்பு பங்குச் சந்தையில் அனைத்துப் பங்கு விலை சுட்டெண்களும் 13,000 புள்ளிகளைக் கடந்தன

கொழும்பு பங்குச் சந்தையில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்களும் இன்று 13,000 புள்ளிகளைக் கடந்துள்ளன.

ஜனவரி 31, 2022 இற்குப் பின்னர் முதன்முறையாக, கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று 13,000 புள்ளிகளைக் கடந்துள்ளன.

அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 136.20 புள்ளிகளால் அதிகரித்துள்ளதாகக் கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

நேற்றைய பரிவர்த்தனைகளின் முடிவில், அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 13,125.19 புள்ளிகளாகப் பதிவு செய்யப்பட்டதன், மொத்த புரள்வு 6.9 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாகக் கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனநாயகம் வெல்லுமா?

இன்று இலங்கையில் பொதுத் தேர்தல். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இந்த நாட்டை நிர்வகிக்கப் போகின்ற அரசையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்காக இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நாட்டு மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இந்தப் பொதுத் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3,359 ஆக அதிகரித்துள்ளது என்று நேற்றுப் பகல் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தேசியத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 956 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 2,403 முறைப்பாடுகளும், தவிரவும் 35 ஏனைய முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று கூறப்பட்டது.

நேற்றுப் பகல் வரையான 24 மணி நேரத்தில் மட்டும் 360 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், இதுவரை நாளாந்தம் பதிவான முறைப்பாடுகளில் இதுவே அதிகமெனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் தேர்தல் குறித்த இரு வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்சட்டத்தைமீறியமைதொடர்பான விதிமுறை மீறல் முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப் பெற்றுள்ளன என்றும், இதுவரை 22 வன்முறைச் சம்பவங்களே பதிவாகியுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இதுவரையான தேர்தல் விதிமுறை மீறல் முறைப்பாடுகளில் 2,626 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 733 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனநாயக வரலாற்றில் வன்முறை மிகவும் குறைந்த ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நாடு சந்தித்து இன்னும் இரண்டு மாதங்களாகவில்லை. அதற்கு இடையில் பொதுத் தேர்தலும் வந்துள்ளது. இந்தப் பொதுத் தேர்தலும் இதுவரையில் நாட்டில் மிகவும்வன்முறைகள்குறைந்தபொதுத் தேர்தலாக அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேர்தலோடு சம்பந்தப்பட்ட தரப்புக்களும் பொதுமக்களும் அதே பொறுப்புணர்வோடு தேர்தல் விடயங்களை அணுகுவார்களாயின் அடுத்து, அடுத்து இரண்டு மிகப்பெரிய தேர்தல்களை - ஜனாதிபதித் தேர்தலையும் பொது தேர்தலையும் - வரலாற்றில் முன்னபோதும் இல்லாத விதத்தில் வன்முறைகளற்ற தேர்தலாக நடத்தி முடித்த சாதனையை நாடு காண முடியும்.

இன்று வாக்களிப்பின் போதும், அதன் பின்னர் தொடரும் வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவு அறிவிப்பு வரையிலும் இதே பொறுமையையும் பொறுப்புணர்வையும் பொதுமக்களும் அரசியல் தரப்புக்களும் பின்பற்றினால் இந்தத் தேர்தலையும் வன்முறைகள் மிகக்குறைந்த சாதனைத் தேர்தலாக நடத்தி முடிக்கலாம்.

தேர்தல்முடிவுகள்எப்படிஇருந்துவிட்டும் போகட்டும். யாருடைய கையாவது ஓங்கட்டும். அரசுகள் மாறட்டும். ஆனால் மக்கள் பொறுமையைக் கடைப்பிடித்து, ஜனநாயகத்தைப் பேணி, ஒரு வன்முறையற்ற தேர்தலுக்கு வழி செய்ய வேண்டும்.

அமைதியான - நீதி, நியாயமான - ஒழுங்கான - வன்முறைகளற்ற - தேர்தல் ஒன்றுதான் ஜனநாயகத்தின் வெற்றியாகக் கருதப்பட முடியும். அதை இன்று இலங்கை மக்கள் செயலில் காட்டுவர் என்று நம்புவோம்.






# சென்னையில் அரசு மருத்துவர் மீது கத்திக்குத்து தாக்குதல்; இருவர் கைது

சென்னையில் பணியிலிருந்த அரசு மருத்துவர் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நான்கு பேர் சிகிச்சைக்காக நேற்று சென்றுள்ளனர். அங்கு புற்றுநோய் பிரிவில் சிகிச்சையளித்து வந்த மருத்துவர் பாலாஜி என்பவரை அவர்கள் கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பில் சென்னையில் தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நான்கு பேர் சிகிச்சைக்காக வந்துள்ளனர். அங்கு புற்றுநோய் பிரிவில் சிகிச்சையளித்து வந்த மருத்துவர் பாலாஜி என்பவரை கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸார் விரைவாக நடவடிக்கை எடுத்து இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்றவர்களையும் கைது செய்து சட்ட ரீதியான நடவடிக்கையை எடுப்பார்கள்.” – என்றார்.

சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனைக்கு நேற்று வழக்கம்போல் நோயாளிகள் சிகிச்சைக்காக சென்றனர். இம்மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவின் சிறப்பு மருத்துவர் பாலாஜி. மருத்துவமனைக்கு சென்ற சிலர் மருத்துவர் பாலாஜியிடம் தகராறில் ஈடுபட்டுள்ளனர். பின்னர், அவர்கள் தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் மருத்துவர் பாலாஜியை குத்தி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால், ரத்தவெள்ளத்தில் மருத்துவர் பாலாஜி சம்பவ இடத்திலேயே சரிந்து விழுந்துள்ளார். இதனால், மருத்துவமனை வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்திருந்தவர்கள், மருத்துவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில் தொடர்புடைய இருவரை பிடித்தனர். பின்னர் சம்பவம் குறித்து கிண்டி பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து மருத்துவமனை வளாகத்துக்கு விரைந்த கிண்டி பொலிஸார், பிடிபட்ட நபர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். தப்பியோடிய மேலும் இருவரை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். மருத்துவமனைக்கு வந்திருந்த இவர்கள் யார்? மருத்துவர் மீது தாக்குதல் நடத்துவதற்கான காரணம் என்ன? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்தகத்திக்குத்துசம்பவத்தில்படுகாயமடைந்தமருத்துவர் பாலாஜிக்கு, இதே மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மக்கள் அதிகமுள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில், மருத்துவர் மீது நடத்தப்பட்ட இந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கிண்டி கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனையில் 30 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

“ஒருமரத்தைநடவுசெய்வதுபிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழி யாகும்.”

- அமிற் றே
(இந்திய ஆன்மீகக் குரு)



# தமிழக மீனவர்கள் தொடர் கைது இந்திய இறையாண்மைக்கு சவால்

## ராமதாஸ் கண்டனம்



"தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின ரின் தொடர் அத்துமீறல்கள் கண்டிக்கத்தக்கவை. இந்திய இறையாண்மைக்கு சவால் விடுக்கும் வகையில் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வரும் நிலையில், அதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் எந்தவிதமான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது வருத்தமளிக்கிறது."

– இவ்வாறு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"வங்கக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீன வர்கள் 12 பேரை சிங்களக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அவர்களின் மீன்பிடி படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக மீனவர்கள் மீதான சிங்களக் கடற்படையினரின் தொடர் அத்துமீறல்கள் கண்டிக்கத்தக்கவை.

இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேர் வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில் சில நாள்களுக்கு முன்பு தான் கைது செய்யப்பட்டனர். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் விலகாத நிலையில் மேலும் 12 மீன வர்களை சிங்களக் கடற்படையினர் கைது செய்திருப்பது இந்தியாவை சீண்டும் செயலாகவே பார்க்கப்பட வேண்டும். இந்திய இறையாண்மைக்கு சவால் விடுக்கும் வகையில் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வரும் நிலையில், அதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் எந்த விதமான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள் ளாதது வருத்தமளிக்கிறது. இந்த சிக்கலுக்கு எப்போது தீர்வு காணப்படுமோ, அப்போது தான் மீனவர்கள் நிம்மதியாக வாழ முடியும்.

மீனவர்கள் கைது செய்யப்படுவதை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். நேற்றும் கூட கைது செய்யப்பட்ட மீன வர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் மீனவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், மீனவர்க ளின் உணர்வுகளை மதித்து சிக்கலுக்கு தீர்வு காண எந்த நடவடிக்கைகளையும் அரசுகள் எடுக்கவில்லை. ஒவ்வொரு முறை மீனவர்கள் கைது செய்யப்படும் போதும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவரது கடமையை முடித்துக் கொள்கிறார்.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக் குடன் கடந்த மாதம் 29 ஆம் திகதி மீனவர் பிரச்சினைக்கான இந்திய – இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் நடை பெற்றது. அதில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மீன வர் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீன வர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளை விரைந்து நடத்த ஏற்பாடு செய்யும்படி மத்திய அரசு மாநில அரசு வலியுறுத்த வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேரையும் விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையில் அரசு மருத்துவர் மீது தாக்குதல்: விரிவான விசாரணைக்கு முதல்வர் உத்தரவு






"மருத்துவர் பாலாஜிக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளை அளித்திடவும், இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்திடவும் ஆணையிட்டுள் ளேன்."

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட் டுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் வலை தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்து வமனையில் பணிபுரியும் மருத்துவர் பாலாஜி நோயாளி யின் குடும்ப உறுப்பினர் ஒருவர் கத்தியால் குத்திய சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. இக்கொடுஞ்செயலில் ஈடுபட்ட நபர் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவர் பாலா ஜிக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளை அளித் திடவும், இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தி டவும் ஆணையிட்டுள்ளேன்.

அரசு மருத்துவமனைகளை நாடி வரும் நோயாளிகளுக்கு நேரம் – காலம் பார்க்காமல் உரிய சிகிச்சை அளிப்பதில் நமது அரசு மருத்துவர்களின் தன்னலமற்ற பணி அளப்பரியது. இப்பணியின்போது அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் நம் அனைவரின் கடமையாகும். இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுத்திடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்." என்று குறிப் பிட்டுள்ளார்.



# காசாவுக்கு போதிய நிவாரணம் வழங்குவதற்கு அமெ.விதித்த நிபந்தனையை மீறியது இஸ்ரேல்

காசாவுக்கான போதிய நிவாரண உதவிகளை வழங்குவதற்கான அமெரிக்கா விதித்திருந்த நிபந்தனையை இஸ்ரேல் மீறியதாக பாலஸ்தீன ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த குற்றச்சாட்டானது, ஐ.நா. அகதிகள் நல அமைப்பின் அவசரக்காலப் பிரிவு தலைவர் லூயிஸ் வாட்டரிஜினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“காசாவுக்கான தேவையான அளவுக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது.

எனினும், போதிய நிவாரணப் பொருள்களை இஸ்ரேல் இராணுவம் காசாவிற்குள் அனுமதிக்கவில்லை.

பல மாதங்களில் இல்லாத அளவுக்கு மிகவும் குறைவான நிவாரணப் பொருள்களை இஸ்ரேல் ராணுவம் அனுமதிக்கிறது. இதன் மூலம் அமெரிக்காவின் கெடுவை இஸ்ரேல் மீறியுள்ளது.” என்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில், காசாவுக்குள் போதிய நிவாரணப் பொருள்களை இன்னும் 30 நாள்களுக்குள் அனுமதிக்காவிட்டால் இஸ்ரேலுக்கு வழங்கப்படும் இராணுவ உதவிகள் குறைக்கப்படும் என்று அமெரிக்கா கடந்த மாதம் 12 ஆம் திகதி எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.












# இந்தோனேஷியாவில் எரிமலை வெடிப்பு; விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன

எரிமலை சாம்பல் வானில் 10 கிலோ மீற்றர் உயரத்திற்கு படர்ந்து காணப்படுவதால், இந்தோனேஷியாவின் பாலி சுற்றுலா தீவுக்கான விமான சேவைகளை பல சர்வதேச விமான நிறுவனங்கள் இரத்து செய்துள்ளன.

வானத்தில் எரிமலை சாம்பல் சூழ்ந்து காணப்படுவதால் பாதுகாப்பு காரணங்களுக்காக பாலிக்கு விமான பயணங்கள் இடைநிறுத்தப்பட்டதாக ஜெட்ஸ்டார் மற்றும் குவாண்டாஸ் ஆகிய விமான சேவைகள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, ஏர் ஏசியா மற்றும் விர்ஜின் ஆகிய விமான சேவைகளும் விமான பயணங்களை இரத்து செய்துள்ளதாக ஃப்ளைட்ராடார் 24 என்ற விமான கண்காணிப்பு வலைத்தளம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் சிறந்த சுற்றுலாப் பகுதியாக பாலி காணப்படுவதோடு, அவுஸ்திரேலிய சுற்றுலா பயணிகளை கவர்ந்த இடமாக திகழ்கிறது.

பாலியில் இருந்து சுமார் 800 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிழக்கு நுசா தெங்கரா மாகாணத்திலுள்ள லெவோடோபி லக்கி-லக்கி எரிமலை கடந்த 3 ஆம் திகதி முதல் தடவையாக வெடித்தது. இதில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர்.

இந்த எரிமலை, கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் வெடிக்கத் தொடங்கி சாம்பல்களை வெளியேற்றி வருகிறது.

இதன் காரணமாக கடந்த 4 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளுக்கான 80 விமானங்கள் பாலியில் இரத்து செய்யப்பட்டுள்ளன.








# முன்னாள் அமைச்சர்கள் தங்கியிருந்த இல்லங்களுக்கு விசேட பாதுகாப்பு

முன்னாள் அமைச்சர்கள் தங்கியிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்பிற்காக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அதற்கமைய, 30 உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர், மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் தகுதியானவர்களிடம் ஒப்படைக்கும் வரை இந்த பாதுகாப்பு திட்டம் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹோட்டலுக்குச் சென்ற நண்பர் குழுவை தாக்கிய உரிமையாளரும் பணியாளர்களும்

## பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் சம்பவம்



பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்குச் சென்றிருந்த நண்பர்கள் குழுவைத் தாக்கி காயப்படுத்தினர் எனக் கூறப்படும் ஹோட்டல் உரிமையாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:-

அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த நண்பர்கள் குழு ஒன்று பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தையும் அதனை சுற்றியுள்ள பகுதியையும் முன்பதிவு செய்து சுற்றுலாவுக்காக அங்குச் சென்றுள்ளது.

இதன்போது, இந்த ஹோட்டலுக்கு சென்ற ஹோட்டல் உரிமையாளரின் உறவினர்கள் சிலர் நீச்சல் தடாகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் தங்களுக்கு வழங்குமாறு ஹோட்டல் உரிமையாளரிடம் கூறியுள்ளனர்.

பின்னர் இந்த ஹோட்டல் உரிமையாளர் குறித்த நண்பர்கள் குழுவிடம் ஹோட்டலை விட்டு வெளியே செல்லுமாறு கூறியுள்ளார்.

இதனால் இரு தரப்பினர்களுக்கு இடையிலும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஹோட்டல் உரிமையாளரும் பணியாளர்கள் சிலரும் இணைந்து நண்பர்கள் குழுவைத் தாக்கியுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வாக்குப் பெட்டிகளை கொண்டு சென்ற பஸ் காலியில் விபத்தில்!

காலி – சவுத்லேண்ட் பெண்கள் கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வீதியில் சென்ற காருடன் மோதி விபத்திற்குள்ளானது.

நேற்றுக் காலை புஸ்ஸ – வெல்லமடை பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் இவ்விபத்தில் எவருக்கும் எவ்விதக் காயமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் விபத்துக்குள்ளான பஸ்ஸிலிருந்த வாக்குப் பெட்டிகளை வேறு வாகனத்தில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# அறுகம்பை தொடர்பில் அமெரிக்கா விடுத்த பாதுகாப்பு தொடர்பான ஆலோசனை நீக்கம்

அறுகம்பை பிரதேசம் தொடர்பில் அமெரிக்கா விடுத்திருந்த பாதுகாப்பு தொடர்பான ஆலோசனை நீக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

மறு அறிவித்தல் வரையில் அறுகம்பை பிரதேசத்திற்கு சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறு கடந்த 23 ஆம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தினால் பாதுகாப்பு தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மேற்படி பாதுகாப்பு தொடர்பான ஆலோசனையை விலக்கிக்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.



# மன்னாரில் வாக்காளர்களுக்கு வழங்க எனக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவுப் பொதிகள் பொலிஸாரிடம் சிக்கின






(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் வாக்காளர்களுக்கு விநியோகிக்கவென அரசியல் கட்சி ஒன்றினால் வாகனத்தில் கொண்டு வரப்பட்டவை எனக் கூறப்படும் ஒரு தொகுதி உலர் உணவுப் பொருள்கள் நேற்று புதன்கிழமை மாலை மன்னார் – யாழ் பிரதான வீதியில் வைத்து அடம்பன் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மன்னார் – யாழ் பிரதான வீதியில் வைத்து வாகனம் ஒன்றைச் சோதனை செய்த போது வாகனத்தில் ஒரு தொகுதி உலர் உணவு பொருள்கள் காணப்பட்டன.

இதன் போது பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் போது அந்த உலர் உணவுப் பொருள்கள் அரசியல் கட்சி ஒன்றினால் வாக்காளர்களுக்கு வழங்கக் கொண்டு வரப்பட்டமை தெரிய வந்தது.

இந்த நிலையில் அந்த பொருள்களைப் பொலிஸார் அடம்பன் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். வாகனத்தின் சாரதி, உதவியாளர் உள்ளடங்கலாக வாகனத்தில் பயணித்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

வாகனத்தில் சுமார் 290 நபர்களுக்கு வழங்கக்கூடிய வகையில் தயார் செய்யப்பட்ட 5 கிலோ அரிசி பக்கட், 2 கிலோ மா,1 கிலோ சீனி, 20 கிராம் ரிங்சோ பக்கட் 5 வீதம் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

இந்தப் பொருள்கள் 6 லட்சத்து 13 ஆயிரத்து 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டமை தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அடம்பன் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை, மீட்கப்பட்ட பொருள்களுடன் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த உள்ளனர்.



# சுயேச்சைக் குழு வேட்பாளர் வீட்டில் செவ்வாய் நள்ளிரவு புகுந்து தாக்குதல்

யாழில் சுயேச்சைக் குழுவாக மாம்பழ சின்னத்தில் போட்டியிடும் புவனேஸ்வரன் வசந்தராஜின் வீட்டின் மீது வன்முறைக்கும்பல் அத்து மீறி உள்நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன் பொழுது வேட்பாளரின் தந்தை காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கபட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொழும்புத்துறை நெளுக்குளம் பகுதியில் உள்ள சுயேச்சைக் குழு 14 இன் வேட்பாளர் புவனேஸ்வரன் வசந்தராஜ்ஜின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த வீட்டிற்குள் நேற்று முன்தினம் இரவு அத்துமீறி உள்நுழைந்த வன்முறைக் கும்பல் ஒன்று தந்தையாரின் தலையில் இரும்பு கம்பியால் தாக்கிய அதேவேளை வீட்டின் ஜன்னல் கண்ணாடி மற்றும் மோட்டார் வாகனத்தின் மீதும் தாக்குதல் நடாத்தியுள்ளது.

மேலும் அயல் வீட்டின் மீதும் தாக்குதலை நடத்தி விட்டு அக்குழு தப்பிச் சென்றுள்ளது. அந்த வீட்டில் வசிக்கும் இளைஞரின் கை மீதும் வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் வாக்குப் பெட்டிகள் நெடுந்தீவிற்கு கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டன







யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் காணப்படும் நெடுந்தீவு பகுதியில் உள்ள மூன்று வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து எடுத்துவரப்பட்டு புங்குடுதீவு குறிகாட்டுவான் இறங்குதுறை ஊடாக பொலிஸார் மற்றும் கடற்படையினரின் பாதுகாப்புடன் கடற் படையினரின் படகுமூலம் கடல் மார்க்கமாக நெடுந்தீவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

# இன்றைய ராசி பலன்கள் - 14.11.2024




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.

இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகளும் முதுகு வலியும் ஏற்படலாம்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சிவசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.




நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்தநேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்து கொள்ளுங்கள்.




உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.




உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையை புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.

பதட்டத்தை தள்ளி வைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் / மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ண வேண்டாம். அது உங்கள் தோலை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.11.2024




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்திற்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யம் அளவிற்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.




இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதட்டமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப்பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரியங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள்பணியில்மகிழ்ச்சியும்திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறையில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். என்றாலும் பதட்டத்தை தவிர்க்க வேண்டும்.




இன்று கவனமாகவும் சாமார்த்தியமாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும் அளவிற்கு இருக்காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும்.உங்கள் பணிகளின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள். பணம் பயனுள்ள வகையில் செலவாகும். எனவே கவலை வேண்டாம்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park